இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 21.01.2026

# இந்திய இலக்கியங்களைக் காக்கும் முதலமைச்சர்!

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் இலக்கியங்களை மட்டுமல்ல; இந்தியாவின் அனைத்து மொழிகளையும் காக்கும் முதலமைச்சராக உயர்ந்து காட்சி அளிக்கிறார். 'தமிழ்நாடு அரசின் சார்பில் தேசிய அளவிலான இலக்கிய விருதுகள் வழங்கப்படும்' என்ற அவரது அறிவிப்பு இந்திய இலக்கியவாதிகள் அனைவரையும் மகிழ்வித்துள்ளது. இத்தகைய விருது எந்த மாநிலத்திலும் இல்லை, எந்த மாநில அரசும் செய்ததும் இல்லை.

''**இலக்கியங்களுக்கு எல்லை இல்லை; அவை நம்மை இணைக்கும் பாலங்கள்**'' என்பதை தனது செயலால் மெய்ப்பித்துக் காட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

"**ஒன்றிய அரசின் அரசியல் குறுக்கீடுகளால், குறுகிய நோக்கத்தால் இந்த ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்படாமல் உள்ளது. எனவே, இந்திய மொழிகளில் வெளியாகும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு, இனி தமிழ்நாடு அரசே ஆண்டுதோறும் 'செம்மொழி இலக்கிய விருது' வழங்கும். முதல் கட்டமாக ஒன்பது மொழிகளுக்கு வழங்கும். தேர்வுக்குழு அமைக்கும். பரிசின் புரவலராக தமிழ்நாடு அரசு இருக்கும்**" என்று அறிவித்துள்ளார் முதலமைச்சர்.

**இது ஒன்றிய பா.ஜ.க. அரசின் தலையில் விழுந்திருக்கும் இரட்டை அடியாகும். சாகித்ய அகாடமி விருதை நிறுத்தி வைத்துள்ள ஒன்றிய அரசை அம்பலப்படுத்தியது முதல் அடி என்றால், பல்வேறு மொழிகளுக்கு நாங்களே விருது வழங்கிக் கொள்கிறோம் என்பது இரண்டாவது அடி ஆகும்.**

சாகித்ய அகாடமி, லலித் கலா அகாடமி, நேஷனல் ஸ்கூல் ஆஃப் டிராமா, சங்கீத் நாடக அகாடமி போன்ற அமைப்புகள் இனி தன்னாட்சி அதிகாரத்தோடு இயங்க முடியாது என்ற பாசிச முடிவை பா.ஜ.க. அரசு எடுத்துள்ளது. இது கலைத்துறைக்கும், கலைஞர்களுக்கும் செய்யப்பட்ட மாபெரும் நெருக்கடி ஆகும். இந்த அமைப்புகள் சார்பில் இனி யாரையும் தேர்வு செய்து விருதுகள் வழங்க முடியாது. இவர்கள் தேர்வு செய்து பா.ஜ.க. அரசுக்கு அனுப்ப வேண்டும். அவர்கள் அவரை ஏற்றுக் கொண்டால்தான் அறிவிக்க முடியும். அவர்களுக்குப் பிடிக்காத, அவர்களது பாசிச, மதவாத, வகுப்புவாத, எதேச்சதிகார, கார்ப்பரேட் அரசியலை எதிர்ப்பவராக இருந்தால், ஏற்றுக் கொள்ளாதவராக இருந்தால் அவருக்கு விருது தரக்கூடாது என்பார்கள். விருதைத் தர முடியாது.

2025 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுகளை அறிவிக்காமல் வைத்துள்ளார்கள். 2025ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருதுக்கான எழுத்தாளர்களைத் தேர்வு செய்ய அதன் நிர்வாகக் குழுக் கூட்டம் டெல்லியில் டிசம்பர் 18-ந் தேதி நடைபெற்றது. இதில் விருதுக்கான எழுத்தாளர்கள் யார் என்பது விவாதிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து டெல்லியில் அன்று மாலை செய்தியாளர்கள் சந்திப்பில் சாகித்ய அகாடமி விருது விவரங்கள் அறிவிக்கப்பட இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் இந்த செய்தியாளர் சந்திப்பு ரத்து செய்யப்பட்டது பெரும் சர்ச்சையானது. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பலரும் இந்த முடிவை கடுமையாக எதிர்த்தார்கள். எதிர்ப்பைப் பற்றி எல்லாம் பாசிச பா.ஜ.க. கண்டு கொள்ளுமா?

2025 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுகள் தமிழில் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுக்கு வழங்கப்பட தேர்வு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவரது, 'தமிழ் சிறுகதைகளின் தடங்கல்' நூலுக்காக தேர்வு செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டுப் படைப்பாளி இவர். தமிழில் தவிர்க்க முடியாத படைப்பாளி இவர். முற்போக்குப் படைப்பாளி இவர். இவரை ஏற்குமா பா.ஜ.க. அரசு? இவருக்கு அங்கீகாரம் கொடுக்க விரும்புமா பா.ஜ.க. அரசு? அதனால் நிறுத்தி விட்டார்கள்.

**விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் ரவிக்குமார், தமது எக்ஸ் பக்கத்தில், "இனிமேல் பா.ஜ.க.காரர்களுக்கு மட்டும் தான் சாகித்ய அகாடமி விருதா? பா.ஜ.க.வில் சாகித்ய அகாடமி விருதாளர்கள் அணி உருவாக்கப்படுகிறதா?" என கேள்வி எழுப்பி இருந்தார். அதுதான் உண்மை ஆகி இருக்கிறது இறுதியில்!**

இந்தியாவில் இலக்கியத்திற்காக வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றாக சாகித்ய அகாடமி விருது கருதப்படுகிறது. நாட்டின் அதிகாரப்பூர்வமாக 24 மொழிகளில் இருந்து கவிதை, சிறுகதை, நாவல், இலக்கிய ஆய்வுப் படைப்புகளுக்காக எழுத்தாளர்கள் இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனைத்தான் நிறுத்தி வைத்து இருக்கிறது பா.ஜ.க. அரசு. இது அவர்களுக்குப் புதிதல்ல.

**வரலாற்றுப் பாடங்களை நீக்குவதையும், இருட்டடிப்புச் செய்வதையும், இந்துத்துவக் கருத்துகளைத் திணிப்பதையும் அரசு அமைத்தது முதல் பா.ஜ.க. செய்து வருகிறது. சி.பி.எஸ்.இ. 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புக்கான வரலாறு மற்றும் அரசியல் அறிவியல் பாடத்தில் சேர்த்தும், மறைத்தும், வெட்டியும், ஒட்டியும் அவர்கள் செய்த செயல்களை பத்து ஆண்டுகளாகப் பார்த்தே வருகிறோம்.**

**இந்துத்துவ சனாதனக் கோட்பாட்டை நிலைநிறுத்தவும், ஒரே நாடு; ஒரே மதம்; ஒரே பண்பாடு; ஒரே மொழி எனும் 'இந்து ராஷ்டிரா' கொள்கைக்கு வலு சேர்க்கவும், வரலாற்று உண்மைகளை மறைத்தும், திரித்தும் பள்ளிப் பாடங்களை மாற்றி வருகிறார்கள். வரலாற்று ஆசிரியர்களை, எழுத்தாளர்களை அச்சுறுத்தி வருகிறார்கள்.**

**வரலாற்று மறைப்பு, வரலாற்றுத் திரிபு, வரலாற்றுத் திணிப்பு - ஆகியவை பல நிலைகளில் நடந்து வருகிறது. இந்த நிலையில் தான் சாகித்ய அகாடமி அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறது. இது தமிழ் மட்டுமே எதிர்கொள்ளும் நெருக்கடி அல்ல. அனைத்து இந்திய மொழிகளுக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடி ஆகும். இந்தி - சமஸ்கிருத வல்லாதிக்கத்தை உருவாக்க நினைக்கும் பா.ஜ.க.வின் மொழி அழிப்பு பயங்கரவாத நடவடிக்கையாகத்தான் பார்க்க வேண்டும்.**

இத்தகைய சூழலில் அனைத்து தேசிய மொழிகளையும் காக்கும் நடவடிக்கையைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்துள்ளார்கள். எழுத்தை, எழுத்தாளர்களை, இலக்கியத்தை, இலக்கியவாதிகளைக் காக்கும் அரசாக தனது 'திராவிட மாடல்' அரசை அவர் நடத்தி வருகிறார்கள்.

**இதுவரை தமிழ் இலக்கியங்களைக் காத்த முதலமைச்சர் அவர்கள், இப்போது இந்திய இலக்கியங்களையும் காக்கும் முதலமைச்சராக ஆகி இருக்கிறார். இந்தச் செயலிலும் அவரே முதல்வராக இருக்கிறார்.**

## "ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்!"

# ஓசூரில் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கருத்துக் கேட்புக் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது!

**கிருஷ்ணகிரி, ஜன. 21 -**

**ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்! 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தொடக்கம்; கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது.**

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டலின்படி, 2026 சட்டப்பேரவை தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ஜனவரி 19 ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் டி.கே.எஸ். இளங்கோவன், கோவி.செழியன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாக ராஜன், டி.ஆர்.பி.ராஜா, எம்.எம். அப்துல்லா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி. சந்தானம் ஐ.ஏ.எஸ்., சுரேஷ் சம்பந்தம் ஆகிய 12 பேர் அடங்கிய குழு பயணம் செய்து பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க தொடங்கியுள்ளது.

ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்! 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கருத்துக் கேட்புக் கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், ஆனந்த் கிராண்ட் பேலஸில் தொடங்கியது. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் முதல் கருத்துக் கேட்புக் கூட்டம் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது.





இந்தக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் பிரகாஷ் எம்.எல்.ஏ., மதியழகன் எம்.எல்.ஏ., தர்மபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி, தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பழனியப்பன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுகவனம், வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செங்குட்டுவன், முருகன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## போலிப் பாசத்தை கொட்டுகிறார் எடப்பாடி பழனிசாமி!

# அரசு ஊழியர்கள் மீது அ.தி.மு.க. திடீர் நீலிக்கண்ணீர் வடிக்கிறது!

## பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

**சென்னை, ஜன. 21 –**

**2003ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து அரசு ஊழியர்களின் எதிர்காலத்தையே நிர்மூலமாக்கிய அ.தி.மு.க. இப்போது ஏன் நீலிக்கண்ணீர் வடிக்கிறது? அரசு ஊழியர்களை கொச்சைப்படுத்துவதையே வாடிக்கையாக வைத்திருக்கும் பழனிசாமி ஏன் பதறுகிறார்? என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதை பார்த்து எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பதற்றப்படுவதை அவரது பேட்டிகளும் அறிக்கைகளும் வெளிப்படுத்துகின்றன. சேலத்தில் செய்தியாளர்களுக்கு எடப்பாடி பழனிசாமி பேட்டி அளித்த போது "மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதியத் திட்டத்திற்குத் திரும்புவது பற்றி சூழ்நிலையைப் பொறுத்து முடிவு எடுக்கப்படும்" என்று சொல்லியிருக்கிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி அரசு ஊழியர்களை மகிழ்ச்சியடைய வைத்திருக்கிறார். ஆட்சியில் இருந்த போது பழைய ஓய்வூதியத் திட்ட வாக்குறுதியை நிறைவேற்றாத பழனிசாமி ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றுவதாகச் சொல்வது "அறுக்கமாட்டாதவன் இடுப்பில் 58 அருவாளாம்" என்ற பழமொழியைத்தான் நினைவுக்கு கொண்டு வருகிறது.

ஓய்வூதிய திட்டத்தை முழுமையாகப் பறித்து அரசு ஊழியர் எதிர்காலத்தையே 2003ஆம் ஆண்டில் சிதைத்த அ.தி.மு.க. தற்பொழுது அரசு ஊழியர்கள் மீது திடீர் கரிசனம் காட்டுவதே வெறும் தேர்தல் நாடகம்தான் என்பதைக் கூட அரசு ஊழியர்கள் புரிந்து கொள்ளமாட்டார்களா என்ன?

2016 சட்டப்பேரவை தேர்தலுக்காக அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி எண் 46ல் பழைய ஓய்வூதியத் திட்டம் தொடர நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு ஊழியர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது. அந்த வாக்குறுதியை 5 ஆண்டுகாலமாக ஏன் நிறைவேற்றவில்லை?

அரசு ஊழியர்களின் 23 ஆண்டுக் காலக் கோரிக்கையான ஓய்வூதியத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து அவர்களின் வாழ்வில் வசந்தத்தை தந்திருக்கிறார். இப்போது தி.மு.க. அந்த வாக்குறுதியை நிறைவேற்றியதும் பொறுக்க முடியாமல் பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு மாறுவது பற்றி முடிவு எடுப்போம் என்றெல்லாம் தேன் தடவி பேசுகிறார் பழனிசாமி. 4 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த போது பழனிசாமி அந்தப் பழைய ஓய்வூதியத் திட்ட வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கலாமே! ஏன் செய்யவில்லை? இப்போது தி.மு.க. அரசு அறிவித்ததும் பொங்கி எழுவது ஏன்?

பழனிசாமி ஆட்சியில் 2019ல் அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்திய நேரத்தில் அரசு ஊழியர்களின் சம்பளத்தை எல்லாம் பட்டியல் போட்டு தனியார் நிறுவன ஊழியர்களின் சம்பளத்தைவிட அதிகமாக அரசு ஊழியர்கள் வாங்குகிறார்கள் என விளம்பரம் வெளியிட்டு அரசு ஊழியர்களை கொச்சைப்படுத்திய பழனிசாமிதான் இப்போது அரசு ஊழியர்கள் மீது போலிப் பாசத்தை கொட்டுகிறார்.

ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில் ஓய்வூதியக் கணக்கீடு என்பது கடைசியாகப் பெற்ற 12 மாத ஊதியத்தின் சராசரி அடிப்படை ஊதியத்தில் 50 சதவிகிதம். ஆனால் தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் ஓய்வூதியக் கணக்கீடு என்பது அரசு ஊழியர் கடைசியாகப் பெற்ற மாதத்தின் அடிப்படை ஊதியத்தில் 50 சதவிகிதம். இந்தக் கணக்கீடுதான் பழைய ஓய்வூதியத் திட்டத்திலும் இருந்தது. அதையே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து பழைய ஓய்வூதியத் திட்டத்தைக் கேட்ட அரசு ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறார்.

ஒன்றிய அரசின் திட்டத்தில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டுமே ஓய்வூதியமும், அதன் தொடர்ச்சியாகக் குடும்ப ஓய்வூதியமும் கிடைக்கும். ஆனால், தமிழ்நாடு அரசின் திட்டத்தில் பணிக்காலம் குறைவாக இருந்தாலும் குறைந்தபட்ச ஓய்வூதியம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

13,000 கோடி ரூபாயை அரசு இந்த திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளதுடன், ஆண்டு தோறும் சுமார் 11,000 கோடி ரூபாயை கூடுதலாக ஒதுக்கும் என அறிவித்துள்ளது.

ஆட்சியில் இருந்தபோது 2003ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திட்டத்தையே ரத்து செய்து அரசு ஊழியர்களின் எதிர்காலத்தையே நிர்மூலமாக்கிய அ.தி.மு.க. இப்போது ஏன் நீலிக்கண்ணீர் வடிக்கிறது? அரசு ஊழியர்களை கொச்சைப்படுத்துவதையே வாடிக்கையாக வைத்திருக்கும் பழனிசாமி ஏன் பதறுகிறார்?

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.